உ

ஓம் நமோ நாராயணாய நம

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், மொண்டிபாளையம்

## www.venkatesaperumal.com

### திருப்பாவை
### ஆண்டாள் தனியன்கள்

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்*
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம் * - முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம், * கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமேவந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்க மெடுத்தூத* - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் *
பாதங்கள் யாமுடையபற்று.

நீளா துங்க ஸ்தநகிரி தடீஸுப்தம் உத்போத்யக்ருஷ்ண
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசத சிரஸ் ஸித்தமத்யாபயந்தீ
ஸ்வோச்சி ஷ்டாயாம் ஸ்ரஜி நிகளி தம் யா ப லாத்க்ருத்ய பு ங்க்தே
கோதா தஸ்யை நம இத மிதம் பூ ய ஏவாஸ்து பூ ய

அன்னவயற் புதுவை யாண்டாள் * அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் * - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே ! * தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் ! * நாடி நீ
வேங்கடவற்கு கென்னை விதியென்ற விம்மாற்றம் *
நாங் கடவா வண்ணமே நல்கு.

உ

ஓம் நமோ நாராயணாய நம

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

## திருப்பாவை

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர் மல்கும் மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! *
கூர் வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன*
ஏர் ரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம் *
கார் மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்*
நாராயணனே நமக்கே பறை தருவான் *
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

1

வையத்து வாழ்வீர்காள் ! நாமும் நம் பாவைக்குச்*
செய்யும் கிரிசைகள் கேளீரோ* பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி*
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி*
மையிட்டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம் *
செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம்*
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

2

** ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்*
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரி பெய்து*
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல்உகளப்*
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப*
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக்* குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்*
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

3

ஆழி மழைக் கண்ணா ! ஒன்று நீ கை கரவேல்*
ஆழியுள் புக்கு, முகந்து கொடார்த்தேறி*
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து*
பாழியந் தோளுடைப் பற்பநா பன் கையில் *
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து *
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல் *
வாழ உலகினில் பெய்திடாய் * நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்*
தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி-விளக்கைத்*
தாயைக் குடல்-விளக்கம் செய்த தாமோதரனைத்*
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது*
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க*
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
தீயினில் தூசாகும்! செப்பேலோ ரெம்பாவாய். 5

## திருப்பாவை

புள்ளும் சிலம்பினகாண்! புள்ளரையன் கோயிலில் *
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?*
பிள்ளாய் ! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு*
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி*
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் *
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம் *
உள்ளம் புகுந்து குளிந்தேலோ ரெம்பாவாய். 6

கீசு கீசு சென்றெங்கும் ஆனைச்சாத்தன் * கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!*
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து*
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?*
நாயகப் பெண்பிள்ளாய் ! நாராயணன் மூர்த்தி*
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?*
தேச முடையாய் ! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு*
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும் *

போவான் போகின்றாரைப் போகாமல் காத்து* உன்னைக் *
கூவுவான் வந்து நின்றோம் * கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால் *
ஆவாவென்றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய*
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும் *
மாமான் மகளே! மணிக்கதவம் தாழ்திறவாய் *
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ*
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ*
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் ! *
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார் *
நாற்றத் துழாய் முடி நாராயணன் * நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும் *
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?*
ஆற்ற அனந்தல் உடையாய் ! அருங்கலமே!*
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். -10

## திருப்பாவை

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும் *
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!*
புற்றர வல்குல் புனமயிலே! போதராய் *
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து* நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணம் பேர்பாட*

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி!* நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய் * 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி*
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர*
நனைத்து இல்லம் சேறு ஆக்கும் நற் செல்வன் தங்காய்! *
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்*
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற*
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய் *
இனித் தான் எழுந்திராய் ஈது என்ன பேருறக்கம் *
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்*
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப் *
பிள்ளைகள் எல்லாரும் பாவைக்-களம் புக்கார் *
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போது-அரிக்கண்ணினாய் *
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே*
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால் *
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் *
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து, ஆம்பல் வாய் கூம்பின காண் *
செங்கற்பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்*
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் *
நங்காய் எழுந்திராய்! நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!*
சில்லென் றழையேன்மின், நங்கைமீர் போதர்கின்றேன் *
வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாயறிதும் *
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக*
ஒல்லை நீ போதாய், உனக்கு என்ன வேறுடையை?*
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்து எண்ணிக்கொள் *

வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

## திருப்பாவை

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பனே!* கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! * மணிக்கதவம் தாள் திறவாய் *
ஆயர் சிறுமியரோமுக்கு* அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான் *
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான் *
வாயால் முன்னமுன்னம் மாற்றதே, யம்மா* நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும் *
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய் *
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குல விளக்கே!*
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய் *
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த*
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய் *
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா*
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

**உந்து மத களிற்றன் ஓடாத தோள்வலியன் *
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்! *
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய் *
வந்தெங்கும் கோழி அழைத்தன காண் * மாதவிப் *
பந்தல்மேல் பல்கால் குயில்-இனங்கள் கூவின காண் *
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட*
செந்தாமரைக் கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல் *
மெத்தென்ற பஞ்ச-சயனத்தின் மேலேறிக்*
கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் *
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய் *
மைத் தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை*
எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண் *
எத்தனை யேலும் பிரிவு ஆற்றகில்லாயால் *
தத்துவம அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று*
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய் *
செப்பம் உடையாய் திறல் உடையாய்! * செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய் *
செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல் *
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய் *
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

### திருப்பாவை

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீது அளிப்ப*
மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும் பசுக்கள் *
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய் *
ஊற்றம் உடையாய்! பெரியாய்! * உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில் எழாய் *
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண் *
ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே*
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண் மா ஞாலத்து அரசர் *அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே*
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம் *
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே*
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?*

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் *
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல் *
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும் *
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி*
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு*
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! * உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி * கோப்புடைய
சீரிய சிங்காசனத்து திருந்து* யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

**அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடி போற்றி*
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி*
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி*
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி*
குன்று குடையா வெடுத்தாய்! குணம் போற்றி*
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி*
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் *
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து* ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர*
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த*
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் *
நெருப்பு என்ன நின்ற நெடுமாலே!* உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில் *
திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி*
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

## திருப்பாவை

மாலே! மணிவண்ணா! மார்கழி நீர் ஆடுவான் *
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல் *
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன*
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே*
சாலப் பெரும் பறையே, பல்லாண்டு இசைப்பாரே*
கோல விளக்கே கொடியே விதானமே*
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!* உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம் பெறும்சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாக*
சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே*
பாடகமே! என்று அனைய பல் கலனும் யாம் அணிவோம் *
ஆடை உடுப்போம், அதன் பின்னே பாற் சோறு*
மூட நெய் பெய்து முழங்கை வழிவார*
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

**கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம் *
அறிவு ஒன்றும் இல்லாத வாய்க்குலத்து* உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம் *
குறைவொன்றும்இல்லாத கோவிந்தா!* உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே*
இறைவா! நீ தாராய் பறையலோ ரெம்பாவாய். 28

**சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து* உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்திற் பிறந்து* நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது*

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!*
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும்* உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம் *
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

**வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை*
திங்கள்-திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி*
அங்குப் பறைகொண்டவாற்றை* அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே*
இங்கு இப் பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் *
செங்கண்-திருமுகத்துச் செல்வத் திருமாலால் *
எங்கும் திருவருள் பெற் றின்புறுவ ரெம்பாவாய். 30

கோதைபிறந்தவூர் கோவிந்தன்வாழுமூர்
சோதிமணிமாடம்தோன்றுமூர் நீதியால்
நல்லபக்தர் வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்
பாதங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்கோதைதமிழ் ஐயைந்
துமைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

திருவாடிப்பூரத்துச்செகத் துதித்தாள் வாழியே!
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே!
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!
பெரும்புதூர் மாமுனிக்குப்பின்னனாள் வாழியே!
ஒரு நூற்று நாற்பத்து மூன்று உறைத்தாள் வாழியே!
உயரரங்கர்க்கே கன்னி உகந்தளித்தாள் வாழியே!
மடுவாடும் திருமல்லிவள நாடு வாழியே!
வண்புதுவை நகர்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ

**உ**

**ஓம் நமோ நாராயணாய நம**

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

சடகோபனன் தண் தமிழ் நூல் வாழ கடல் சூழ்ந்த
மண்ணுலகம் வாழ மணவாழா மாமுனியே
இன்றும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஆண்டாள் திருவடிகளே சரணம் *

உ

ஓம் நமோ நாராயணாய நம

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

## வாரணமாயிரம்

அல்லிநாள் தாமரைமே லாரணங்கி னின் துணைவி
மல்லிநா டாண்ட மடமயில் மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

**வாரணமாயிரம் சூழவலம் செய்து*
நாரணநம்பி நடக்கின்றானென்றுஎதிர் *
பூரணபொற்குடம் வைத்துப்புறமெங்கும் *
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டு*
பாளை கமுகு பரிசுடைப்பந்தர் கீழ் *
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் * ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 2

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் *
வந்திருந்து என்னை மகட் பேசிமந்திரித்து*
மந்திரக் கோடியுடுத்தி மணமாலை*
அந்தரிசூட்டக் கணாக்கண்டேன் தோழீ! நான் - 3

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி*
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி*
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என் தன்னை
காப்பு நாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 4

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி*
சதிரிள மங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள*
மதுரையார் மன்னன் அடிநிலைதொட்டு* எங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
முத்துடைத்தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ் *

# அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

# மொண்டிபாளையம்

# www.venkatesaperumal.com

மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்ற கணாக்கண்டேன் தோழீ! நான் - 6

வாய்நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால் *
பாசிலை நாணல்படுத் துப்பரிதிவைத்து*
காய்ச்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி*
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 7

இம்மைக்கும் ஏழேற்பிறவிக்கும் பற்றாவான் *
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி*
அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 8

வரிசிலைவாள் முகத்து என்னை மார்தாம்வந்திட்டு*
எரிமுகம்பாரித்து என்னை முன்னே நிறுத்தி*
அரிமுகன் அச்சுதன் கைமேல் என் கைவைத்து*
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 9

குங்கும மப்பிக் குளிர்சார்ந்த மட்டித்து*
மங்கலவீதி வலம் செய்து மணநீர் *
அங்கு அவனோடும் உடன் சென்று அங்கு ஆனைமேல் *
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் - 10

**ஆயனுக்காகத் தான் கண்டகனாவினை*
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதைசொல் *
தூயதமிழ்மாலை ஈரைந் தும்வல்லவர் *
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே. - 11